# மெததும்பர பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது றிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மெததும்பர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 9,717,760 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,823,186 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,089,505 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,830 | 973 | 1,826 |
| (ii) | வாடகை | 3,178 | 2,379 | 1,338 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 793 | 800 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,055 | 1,260 | 795 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 588,250 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 6,213,697 |

### 2.2.3 தொலைத் தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரக் கட்டணம்

தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுரங்களுக்காக வருடாந்த சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாகத் தீர்மாணிக்கப்பட்ட தொகை சபையினால் அறவிடமுடியுமாக இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் முன்னைய 03 வருடங்களில் அண்ணளவாக ரூபா 100,000 இற்கு மேற்பட்ட தொகை சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 06 செயற்திட்டங்களுக்காக அறவிடவேண்டிய ரூபா 46,200 தொகையான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 மாட்டிறைச்சி போக்குவரத்துக் கட்டணம்

1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் 520/7 ஆம் இலக்க பிரதேச சபை பொது அங்கீகாரத்தின் உப விதிக் கோவையின் 32 ஆவது விதியில் 09 ஆவது பிரிவின் பிரகாரம் தலைவரின் விஷேட அதிகாரத்தின் அடிப்படையில் சபை அதிகாரப் பிரதேசத்திற்கு கொண்டு வரப்படுகின்ற இறைச்சி மிருக வைத்தியரினால் பரிசோதனை செய்ய வேண்டியிருந்ததுடன் அவ்வாறு பரிசோதனை செய்யப்படுகின்ற ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் ரூபா 10 இனை விஞ்சாத கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு அறவிட வேண்டியமையின் காரணமாக அண்ணளவாக ரூபா 96,000 அளவிலான வருமானத்தை சபை இழந்திருந்தது.

### 2.2.6 தெல்தெனிய வாராந்த சந்தை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 சனவரி 01 தொடக்கம் 2011 மார்ச் 30 வரையான காலப்பகுதிக்குரிய வாராந்த சந்தை வாடகைக்கு விட்ட வகையில் வாடகைக் கட்டணமாக ரூபா

77,771 தொகை மற்றும் சட்டரீதியற்ற வகையில் தங்கியிருந்ததற்காக ரூபா 3,000 தொகை வாடகையாளரிடமிருந்து சபைக்கு 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்தது. அவ்வாறே அந்த வாடகையாளரிடமிருந்து பாதுகாப்பு வைப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள் வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஏப்ரல் 15 தொடக்கம் 2011 மே 24 வரையான காலப்பகுதிக்காக மேலும் ஒரு நபருடன் சபையினால் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாதிருந்தும் வாடகைப் பணம் அறவிடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 85,645 நிலுவையாகக் காணப்பட்டது.

(iii) 2011 ஏப்ரல் 01 தொடக்கம் 2011 ஏப்ரல் 11 வரையும் 2011 மே 25 தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய வாராந்த சந்தைக் கட்டணத்தை அறவிடுவதற்கு வீதித் தொழிலாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஏப்ரல் 12 தொடக்கம் 2011 ஏப்ரல் 14 வரையும் வாராந்த சந்தைக் கட்டணமாக எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2005 ஆம் ஆண்டில் தெல்தெனிய வாராந்த சந்தைக் கட்டணமாக டீ.எம் செனவிரத்ன என்பவரிடமிருந்து ரூபா 15,065 தொகை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 மோட்டார் வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்

2007 யூலை 12 ஆந் திகதிய இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1505/18 ஆம் இலக்க உப விதியின் பிரகாரம் வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

2011 ஆம் ஆண்டின் களஞ்சிய மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 51,648 பெறுமதியான 4' 1000 வகையில் 08 நீர்க் குழாய்கள் காணாமல் போனமை தொடர்பாக

பொறுப்புவாய்ந்த நபர் இனங்காணப்பட்டு உரிய நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதுலேமட பின் செயற்பாட்டு நிலையத்தை நிர்மாணிக்கும் வேலையின் இரண்டாவது கட்ட இறுதி அறிக்கையின் பிரகாரம் விடய இலக்கம் 04 இன் கீழ் முதலாவது வகுப்பின் கதவு மற்றும் யன்னல் கம்பிகள் இட்டு பொருத்துதல் என்பவற்றுக்காக 418 அடி நீளத்திற்கு ஒரு அடிக்கு ரூபா 221 படி ரூபா 92,394 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 ஆகஸ்ட் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கட்டிடத்திற்குப் பொருத்தப்பட்டுள்ள கதவு மற்றும் யன்னல்களின் நீளம் 330 அடியானமையால் 88 அடி நீளத்திற்காக ரூபா 19,451 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. விடய இல. 06 இன் கீழ் மண் நிரப்பி அமைப்பதற்காக 6.65 கியூபிற்கு ரூபா 13,173 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மண் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெல்தெனிய பொருளாதார நிலையக் காணியில் கடைகளை நிர்மாணிப்பதற்காக கடை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணத்தைப் பயன்படுத்தி ரூபா 188,522 பெறுமதியில் கட்டிடப் பொருட்கள் கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அப் பொருட்கள் கடை உரிமையாளர்களினால் பெறப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே அவ்வொப்பந்தத்தின் விடய இல. 15 இன் கீழ் கொங்கிரீட் காண் அமைப்பதற்காக ரூபா 342,744 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருந்தமை 2012 ஆகஸ்ட் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 2.5 பொது வசதிக்காக ஒதுக்குதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தெல்தெனிய உடவெலயில் அமைந்துள்ள வலவ்வத்த காணியைக் பகுதிகளாக்கி விற்பனை செய்வதற்குரிய கூறிடல் திட்டங்களின் பிரகாரம்

பொதுச் செயற்பாடுகளுக்காக 10 பேர்ச்சஸ் ஆன 01 ஆம் இலக்க காணிப்பகுதி 2007 சனவரி மாதம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிலப்பகுதியை சட்டரீதியாக கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வேறொரு நபருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ii) 2707 ஆம் இலக்க நில வரைபடத்தின் பிரகாரம் தனியார் கம்பனிக்குரிய மொத்தக் காணி அளவில் பொதுச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலத் துண்டு 2007 நவம்பர் 30 ஆந் திகதி சபைக்கு வழங்குவதற்கு எழுத்து மூல உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணிப் பகுதியை சபைக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்ட அனுமதியற்ற 35 நிர்மாணங்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,512,855 ஆக இருந்தது.

(இ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதி ஆதனவரி சொத்துக்கள் தடை செய்யும் கடமைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 8,000 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பொதுநூலகப் புத்தகங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட காணாமல் போயிருந்த ரூபா 93,093 பெறுமதியான 1568 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 எண் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் 2010 நவம்பர் தொடக்கம் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை 44 வேலைகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் வரியான ரூபா 262,554 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு